2022 ஜனவரி 7]
மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, ஆணை பெறப்பட்டு மேல்நிலைப் பள்ளியாக தரமுயர்த்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு மூன்று அரசாணைகளைக் குறிப்பிட்டுச் சொல்லி உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக தரமுயர்த்தித் தரப்படும் என்று தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். பத்து உறுப்பினர்களுக்கு மேல் துணைக் கேள்விகள் கேட்கிறீர்கள். எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவில், அந்தப் பதிலை பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.*

வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார், மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

20—

உள் விளையாட்டு அரங்கம்

***3700—திரு. வே. சம்பத்குமார்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *அரூர் தொகுதி, அரூர் விளையாட்டு மைதானத்தில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.*

(அ) *மற்றும்* (ஆ) *அரூர் தொகுதி, அரூர் விளையாட்டு மைதானத்தில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார் அவர்கள்.

திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குப் பணிவான வணக்கம். எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ.பி.எஸ். அவர்களையும், எங்களுடைய வழிகாட்டி, தருமபுரி மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

அரூர் பேரூராட்சியானது வளர்ந்துவரும் பேரூராட்சி. 30,000 மக்கள்தொகை கொண்ட பேரூராட்சியாகும். கிராமப்புறத்தில் இருக்கின்ற அரசுப் பணியாளர்கள் அனைவரும் அரூர் நகரப் பகுதியை நோக்கி குடிபெயர்ந்து வருகின்றார்கள். அவர்கள் காலை, மாலை இருவேளைகளிலும் உடற்பயிற்சி மற்றும் நடைபயிற்சி மேற்கொள்வதற்கு போதிய மைதான வசதி இல்லாமல் இருக்கின்றார்கள். ஆகவே, அவர்களுடைய தேவையினைக் கருத்தில்கொண்டு, பல்நோக்கு வசதியுடன்கூடிய உள் விளையாட்டு அரங்கம் அமைத்துத் தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழக விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கென பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில் விளையாட்டு கட்டமைப்புகள், உலகத் தரத்திலான விளையாட்டு மைதானங்களை முழுமையான வசதிகளுடன் அமைப்பதற்கான நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டு வருகிறார். முதற்கட்டமாக மாவட்டத் தலைநகரங்களில் முழுமையான வசதிகளுடன் விளையாட்டு மைதானங்களை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையில், ஒவ்வொரு மாவட்ட தலைநகரத்திலும் மாவட்ட விளையாட்டு அரங்கில், ஒரு திறந்தவெளி விளையாட்டு அரங்கம், ஓர் உள் விளையாட்டு அரங்கம், ஒரு நீச்சல் குளம் என அமைக்கின்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

2022 ஜனவரி 7]

தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், மாவட்ட தலைநகரத்தில், மாவட்ட விளையாட்டு அரங்கமானது, அதிக வசதிகளுடன் இருக்கின்றது. குறிப்பாக 500 பேர் அமரக்கூடிய இருக்கை வசதி, 400 மீட்டர் தடகள ஓடுபாதை, கால்பந்து ஆடுகளம், கூடைப் பந்து ஆடுகளம், கையுந்து பந்து ஆடுகளம், பூப்பந்து ஆடுகளம், குத்துச்சண்டை வளையம், உடற்பயிற்சிக்கூடம், நீச்சல் குளம், இறகுப் பந்து Indoor Stadium, Roller skating, *பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம், தமிழக விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் மாணவிகளுக்கென விளையாட்டு விடுதி என பல்வேறு வசதிகள் இருக்கின்றன.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வது போன்று, அரூர் பேரூராட்சிப் பகுதியில் விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் 750 பேர் அமரக்கூடிய இருக்கைகள், 400 மீட்டர் தடகள ஓடுபாதை, கூடைப்பந்து ஆடுகளம், கையுந்து பந்து ஆடுகளம் என பல்வேறு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அரூர் பகுதியில் 28–12–2010 அன்று, அன்றைய துணை முதலமைச்சர், இன்றைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்தான் விளையாட்டு அரங்கத்தை திறந்து வைத்திருக்கின்றார்கள். அந்தப் பகுதியில் இருக்கின்ற பயனாளிகள், விளையாட்டு வீரர்கள் அவர்களின் கருத்துரு பெறப்பட்டு, வாய்ப்பு இருப்பின் உள் விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கான பரிசீலனைகளை அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோன்று, தருமபுரி மாவட்டத்தின் தலைமையகத்தில் இருப்பது உண்மைதான். ஆனால், அரூர் பகுதி என்பது அதிக தூரம் இருக்கின்ற கிராமப்புறப் பகுதி. அதன் மையப் பகுதியில் அந்த விளையாட்டு அரங்கம் கிட்டத்தட்ட ஐந்தே முக்கால் ஏக்கரில் இருக்கின்றது. அங்கு பார்வையாளர் மாடத்தை நீங்கள்தான் திறந்து வைத்தீர்கள். பின்னர், எங்களுடைய மாண்புமிகு அமைச்சர்*

TRUTH ALONE TRIUMPHS

அவர்கள், அவர்களுடைய ஆட்சியில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் ஊரக விளையாட்டுத் துறை மூலமாக எடுத்து அதனைச் சரி செய்தார்கள். பின்னர், அம்மா பிறந்த நாள் விழாவில், உள் விளையாட்டரங்கத்தின் உள்ளே இரண்டு வாலிபால் கிரவுண்ட், ஒரு கிரிக்கெட் கிரவுண்ட் எல்லாம் அவரது சொந்த செலவில் செய்து கொடுத்தார்கள். கடந்த முறை சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து இரண்டு விளக்குகள் அமைத்துக் கொடுத்திருக்கிறேன். இதற்குப் பக்கத்தில் மொத்தம் 5 கல்லூரிகள் உள்ளன. ஓர் அரசுக் கல்லூரி, நான்கு தனியார் கல்லூரிகள், 7 தனியார் மற்றும் அரசுப் பள்ளிகள் உள்ளன. சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பொழுதுபோக்கிற்கு, உடற்பயிற்சித் திறனை மேற்கொள்வதற்கு எந்த வசதியும் இல்லை. எனவே, இதனை அரசின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, Multipurpose–பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கத்தை அவசியம் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் பகுதியில் ஓர் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டும் என்கிற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற தொடக்க நிலையிலேயே தமிழகத்தில் இருக்கின்ற ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ரூ.3 கோடி செலவில் உள் விளையாட்டு அரங்கங்கள், விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பைத் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில், மாவட்டத்தின் ஒவ்வொரு தொகுதியிலும் 5 அல்லது 6 ஏக்கர் இடங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாகக் கண்டறியப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் 5 அல்லது 6 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டவுடன், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையான உள் விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டும் என்ற கருத்து பரிசீலிக்கப்பட்டு, வாய்ப்பு இருப்பின் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

2022 ஜனவரி 7]

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

சேலம், நாமக்கல் மாவட்டங்கள், விடுபட்ட விவசாயிகளுக்கு பயிர்க் கடன் தள்ளுபடி சான்றுகள் வழங்குதல் மற்றும் மீண்டும் தொடர்ந்து பயிர்க் கடன் வழங்குதல் குறித்த கூட்டுறவுத் துறை அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு விதி 110–ன்கீழ் இந்த அறிவிப்பை வழங்கிட விரும்புகிறேன்.*

கடந்த ஆண்டு 2020–2021–ல் பயிர்க் கடன் வழங்குவதற்காக ரூ.11,000 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. இதில் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் பயிர்க் கடன் வழங்குவதற்காக நிர்ணயிக்கப்பட்ட குறியீடு முறையே ரூ.746 கோடி மற்றும் ரூ.534 கோடி ஆகும். இதில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எய்தியது ரூ.614.92 கோடி மற்றும் ரூ.502.62 கோடி ஆகும். பயிர்க் கடன் என்பது விவசாயிகள் பயிர் செய்வதற்காக மட்டும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு பயிருக்கும் ஒரு ஏக்கருக்கு எவ்வளவு தொகை பயிர்க் கடனாக வழங்கப்பட வேண்டும் என்பது ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்டத் தொழில்நுட்பக் குழுவால் கலந்தாலோசித்து முடிவு செய்யப்பட்டு, குழுவின் பரிந்துரைகள் மாநில தொழில்நுட்பக் குழுவிற்கு அனுப்பப்பட்டு, மாநில தொழில்நுட்பக் குழுவால் ஏற்பளிக்கப்படும் கடன் தொகை அளவின் அடிப்படையில், scale of finance*–பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.*

சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களைப் பொறுத்தவரையில், பெருவாரியாக சோளம் மற்றும் மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்பட்டு வரும் நிலையில், இப்பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு வழங்கப்படும்